

நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் நெல்லை டவுண் லட்சுமி மகாலில் கழக முன்னோடிகள் 100 நபர்களுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்று பொற்கிழிகளை வழங்கினார். உடன் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான், கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றி கொண்டான், மாநில மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலைராஜா, மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த்,பெருமாள், தச்சை சுப்பிரமணியன், நெல்லை நமச்சிவாயம், அன்ட்ன் செல்லத்துரை உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## தமிழகத்தில் கனமழை!

சென்னை, ஜூலை 5 -

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

மத்திய மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய வடக்கு ஆந்திர கடலோரப்பகுதிகளின் மேல் வளி மண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. மேலும் மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூ டும். நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களின் மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், திருப்பூர், தேனி, திண்டுக்கல், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான மற்றும் மிதமான மழை பெய்யக்கூடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## 'வாட்ஸ் அப்'பில் வலம் வருகிறது!




### மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் திறப்பு!

# தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

### மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! கோ.தளபதி எம்.எல்.ஏ.- சேடபட்டி மு.மணிமாறன் முன்னிலை! அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரை!

மதுரை, ஜூலை 5-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நான்மாடக் கூடலாம் மதுரையில் வியக்கத்தகு வகையில் மாபெரும் கலைஞர் நூற்றாண்டு நூலகம் சுமார் 120கோடி ரூபாய் மதிப்பீட்டில் குறிப்பிட்ட காலத்தில் கட்டப்பட்டு வருகிற 15ந்தேதி திறப்பு விழா காண இருக்கிறது.

இத்திறப்பு விழாவிற்கு வருகை தரும் கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாட்டில் இது போன்ற வரவேற்பு இதுவரையில் கொடுக்கப்படவில்லையென நாடே போற்றும் வகையில் எழுச்சிமிகு வரவேற்பு கொடுப்பது குறித்த மதுரை வடக்கு, மதுரை மாநகர், மதுரை தெற்கு மாவட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம் பசுமலை கோபால்சாமி திருமண மண்டபத்தில் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார்.

அமைச்சர் பி.மூர்த்தி பேசியதாவது:-

முத்தமிழ் சங்கம் கொண்ட நான்மாடக் கூடலாம் மதுரையில் முத்தமிழறிஞர், தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நூலகம் கம்பீரமான தோற்றத்தில் சுமார் 120கோடி ரூபாய் மதிப்பீட்டில் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய முயற்சியால் அவரது நேரடி பார்வையில் சிறப்பாக கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. தென்னகம் மட்டுமின்றி தெற்கு ஆசிய மக்களே பாராட்டும் வகையில் புகழ்வாய்ந்த இந்நூலகத்தை வருகிற 15ந்தேதி கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்க உள்ளார்.

சென்னையில் கலைஞர் அவர்கள் அறிஞர் அண்ணா நூலகத்தை அமைத்து கொடுத்து சிறப்பு சேர்த்தார், அதேபோல் மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை நம் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞரின் நினைவுகூறும் வகையில் அமைத்து கொடுத்துள்ளார். இந்த சிறப்பு மிக்க நூலகத்தில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., மற்றும் டிஎன்பிசி உள்ளிட்ட பல்வேறு போட்டி தேர்வுகளில் பங்கேற்க கூடிய மாணவ, மாணவியர் பெருமளவில் பயன்பெறுவார்கள். மேலும் கல்வியாளர்களும் பல்வேறு நூல்களை ஒரே இடத்தில் பயில ஏதுவாக இருக்கும். இது போன்று புகழ்மிக்க நூலகம் வேறு எங்கும் இல்லை என்று கூறும் வகையில் தென்மாவட்ட மக்கள் மட்டுமின்றி தெற்கு ஆசிய மக்களே மனமகிழ்வார்கள்.

சிறப்புமிக்க இந்த நூலகத்தை திறந்து வைக்க வருகிற 15.07.2023 சனிக்கிழமை மதுரை வருகை தரும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விமான நிலையம் முதல் கலைஞர் நூற்றாண்டு நூலகம் வரை வழி நெடுகிலும் பல்லாயிரக் கணக்கான கழகத்தினர், பொதுமக்கள், இளைஞர்கள் என அனைத்து தரப்பினரும் சுமார் 15 கிலோ மீட்டர் தூரம் இருவண்ண கொடியினை கையிலேந்தி எழுச்சிமிகு வரவேற்பு கொடுப்பதற்கான ஏற்பாடுகளை இன்று முதல் துவங்க வேண்டும்.

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாற்பதும் நமதே நாடும் நமதே என எழுச்சியுடன் கூறிவரும் நிலையில் மதுரை, தேனி, விருதுநகர் ஆகிய 3 நாடாளுமன்ற தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான கூட்டணி அமோக வெற்றி பெருவதற்கு நாம் அனைவரும் தேர்தல் பணியை திறம்பட செய்திட வேண்டும்.

தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு கொடுக்கப்பட உள்ள வரவேற்பு நிகழ்ச்சியில் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட கழகத்தினர் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென்றும் இது ஒரு வரலாறு படைக்க கூடிய வரவேற்பாக அமைய வேண்டுமென்றும் அதற்கு நீங்கள் எல்லோரும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் கழக உயர் மட்ட செயல்திட்ட குழு உறுப்பினர் பொன்.முத்துராமலிங்கம், மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், முன்னாள் மேயர் பெ.குழந்தைவேலு, அவைத் தலைவர்கள் பாலசுப்பிரமணியன், ஒச்சுபாலு, நாகராஜன் மற்றும் மதுரை வடக்கு, மதுரை மாநகர், மதுரை தெற்கு மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், ஊராட்சி செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர் என பெரும் திரளானோர் பங்கேற்றனர்.

# நெல்லித்தோப்பு தொகுதி தி.மு.க. அலுவலகம்!

### எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா திறந்து வைத்தார்!

புதுச்சேரி, ஜூலை 5 -

நெல்லித்தோப்பு தொகுதி தி.மு.க. அலுவலகத்தை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா திறந்து வைத்தார்.

புதுச்சேரி மாநிலம், நெல்லித்தோப்பு தொகுதி தி.மு.க. சார்பில் லெனின் வீதி - திருமால் நகர் சந்திப்பில் அமைக்கப்பட்ட தி.மு.க. அலுவலகத்தின் திறப்பு விழா (02.07.2023) அன்று நடைபெற்றது.

மாநில தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் வே.கார்த்திகேயன் தலைமை தாங்கினார். தொகுதி கழகச் செயலாளர் செ. நடராஜன், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் ப. வேலவன் ஆகியோர் வரவேற்று பேசினார்.

தொகுதி அவைத் தலைவர் பாணுகணேசன், துணைச் செயலாளர்கள் கிருபாகரன், சங்கீதா, தகவல் தொழில்நுட்ப அணி அருண், அலெக்ஸ்சாண்டர், தொ.மு.ச. மாநில தலைவர் அண்ணா அடைக்கலம், மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர் கண்ணன், வழக்கறிஞர் அணி ஞானராஜ், ரமேஷ், பாலா சந்தோஷ், கிளைச் செயலாளர்கள் மூர்த்தி, மணி, ராமகிருஷ்ணன், செல்வம், ஹரி, அருள், ராஜீ, ரமேஷ், பரிதிமால், ஏழுமலை, பக்கிரி, கிருஷ்ணகுமார், ஆதிகேசவன், சேவியர், முனியன், ரவி, சோமசுந்தரம், பிரான்சிஸ், தட்சிணாமூர்த்தி, இளைய பெருமாள், ஜெகதீசன், குமார், அர்ஜூனன், சாமிதாஸ், வெங்கடேசன், சரவணன், ஸ்டாலின், கார்த்திக், நாகராஜ், கலைமண்ணன், சிவா, ஞானவேல், வினோத் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த விழாவில், தி.மு.க. மாநில அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, திமுக தொகுதி அலுவலகத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். முன்னதாக அலுவலக வாசலில் அமைக்கப்பட்டிருந்த புதிய கொடிக் கம்பத்தில் கழகச் கொடி யேற்றி வைத்து அனைவருக்கும் இனிப்பு வழங்கினார்.

இதில், மாநில துணை அமைப்பாளர்கள் வி. அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., அ.தைரியநாதன், ஏ.கே. குமார், சட்டமன்ற உறுப்பினர் லீ. சம்பத், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், கே.எம்.பி. லோகையன், டி.அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் வெ.ராமசாமி, பா.செ.சக்திவேல், அ. சோமசுந்தரம், ந.தங்கவேலு, ப. செல்வநாதன், சி. கோபால், ஆர். ரவீந்திரன் (எ) ரவி, வி.செந்தில்வேலன், ப.இளம்பரிதி, பெ. பழனி, மு.பிரபாகரன், எஸ்.எஸ்.செந்தில்குமார், நா. கோபாலகிருஷ்ணன், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ், சிறப்பு அழைப்பாளர் முகிலன், தொகுதி கழகச் செயலாளர்கள் எம்.ஆர். திராவிடமணி, இரா. சக்திவேல், வ. சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், ஜி.பி. சௌரிராஜன், து.சக்திவேல், கோ. தியாகராஜன், ர. சிவக்குமார், ரா. ஆறுமுகம், ப. வடிவேல், ஜெ. மோகன், ர. ரவிச்சந்திரன், வெ.சக்திவேல், க.இராஜாராமன், செல்வ.பார்த்திபன், பி. சா. இளஞ்செழியப் பாண்டியன், ல.மணிகண்டன், கலிய. கார்த்திகேயன், செ. இராதாகிருஷ்ணன், ம. கலைவாணன், ச.அசோக் (எ) மோதிலால் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தொகுதி கழக நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக பங்கேற்றனர்.

### டி.பி.எம்.மைதீன்கான் தலைமை!

# நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி!

### அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வழங்கினார்!

நெல்லை, ஜூலை 5 -

நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் நெல்லை டவுண் லட்சுமி மகாலில் வைத்து கழக முன்னோடிகள் 100 நபர்களுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்வு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலைராஜா, மாநில சட்ட திட்ட தீர்மான குழு உறுப்பினர் சுப.சீதாராமன்,கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றி கொண்டான்,மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன்,மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள்,மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த், பகுதிச் செயலாளர்கள் சுப்பிரமணியன் (தச்சை) அண்டன் செல்லத்துரை (பாளை) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நெல்லை பேட்டை பகுதி செயலாளர் நமச்சிவாயம் கோபி வரவேற்புரை

இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்று கழக முன்னோடிகள் 100 நபர்களுக்கு கலைஞர் உருவ சிலையுடன்,பொற்கிழி வழங்கி பேசியதாவது:-

கழகத் தலைவர் அவர்கள் கலைஞர் நூற்றாண்டு விழாவை ஓராண்டு விழாவாக ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்த உத்தரவிட்டுள்ளார்கள்.ஆனால் மாநகரத்தில் செயலாளர் சு.சுப்பிரமணியன் நடத்தி காட்டி உள்ளார்.தமிழ்நாட்டில் பொற்கிழி வழங்கும் நிகழ்வு இங்குதான் முதலில் ஆரம்பித்துள்ளது.நெல்லை மாநகரம் நடத்தியது ஒரு குடும்ப நிகழ்ச்சியாகும்.

பதவியில் இருப்பவர்கள் மேடையில் இருக்கிறோம் எதிரே உட்கார்ந்திருப் பவர்கள் கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகள்.இந்த இயக்கத்தை வளர்த்தவர்களை அடையாளம் கண்டு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டம் காங்கிரஸ் கோட்டையாக இருந்தது. தலைவர் கலைஞர் அவர்களின் முயற்சி யால் அதனை ரத்தினவேல் பாண்டியன், ஏ.எல்சுப்பிரமணியன், மஸ்தான், தம்பித்துரை, நம்பி ஆகியோர் கழக வளர்ச்சிக்காக பணியாற்றியவர்கள். அப்படிப்பட்டவர்கள் வளர்த்த கட்சி இது. இந்த இயக்கத்தை வளர்த்தவர்களை அடையாளம் கண்டு கௌரவிக்கும் ஒரே கட்சி தி.மு.க. தான். தென் மாவட்டங்களில் அடி, உதை வாங்கி வளர்க்கப்பட்ட இயக்கம் தி.மு.க. இங்கே எதிரில் இருப்பவர்களில் பாதிப்பேர் ஜெயிலுக்கு போய் வந்தவர்கள். தலைவர் கலைஞர் அவர்கள் கஷ்டப்பட்டு கட்சியை வளர்த்தார். அதைத் தாண்டித் தான் இந்த இயக்கம் ஆட்சிக்கு வந்துள்ளது.

நாங்கள் மிசாவைப் பார்த்து வளர்ந்தவர்கள்,லட்சோப லட்சம் தொண்டர்கள் இந்த இயக்கத்தில் உள்ளனர்.மாலையில் ஆளுநர் ஒரு உத்தரவு போடுகிறார்,நடு ராத்திரில் அந்த உத்தரவை வாபஸ் பெறுகிறார்.

கழகத் தலைவர் தளபதி அவர்களின் திறமையை பற்றி அவர்களுக்கு தெரியாது.களத்தில் நிற்கும் தொண்டனாக தளபதி நிற்கிறார். கழகத்திற்கு மிகப்பெரிய நெருக்கடியை தர வேண்டும் என்று மோடி அரசு நினைத்து கொண்டிருக்கிறது.

இங்கே பொறுப்பில் இருக்கும் அனைவரும் தலைமுறை, தலைமுறையாக வருவது ஒரு கொள்கை பிடிப்புடன் தான் இருந்து வருகிறோம்.இது குடும்ப அரசியல் கிடையாது. எங்களை சீண்டி பார்க்காதே,இது பெரியார் தந்த மண், பேரறிஞர் அண்ணா வளர்ந்த மண், கலைஞர் கட்டிக் காத்த மண். இந்தியாவிலே ஒரு தலை சிறந்த இயக்கமாக தலைவர் தளபதி அவர்கள் கழகத்தை வழி நடத்திக் கொண்டிருக் கிறார்கள்.கட்சிக்காக உழைத்தவர்களை மதிக்க வேண்டும். தொண்டனை வாழ்த்தினால் நீ மேலும் மேலும் கழகத்தில் உயரலாம்.

இவ்வாறு கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேசினார்.

நிகழ்வில் மாநகர துணை செயலாளர் அப்துல்கையூப்,பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை,பொதுக்குழு உறுப்பினர் பரமசிவம் ஐயப்பன்,முன்னாள் பொருளாளர் அருண்குமார், மானூர் ஒன்றிய செயலாளர்கள் அருள்மணி, மாரியப்பன்,பாளை மண்டல தலைவர் பிரான்சிஸ், பாலமுருகன், சுதாமூர்த்தி, சிவசுப்பிரமணியன், லட்சுமணன், முன்னாள் எம்.பி. வசந்தி முருகேசன், எல்.ஐ.சி பேச்சிமுத்து, மாமன்ற உறுப்பினர்கள் வில்சன் மணித்துரை, ரம்ஜான் அலி,சகாயமேரி ஜூலியட், ராஜேஸ்வரி,சுப்பு லட்சுமி, ஆமினா பீவி, சபிஅமீர்பாத்து, நித்திய பாலையா, வசந்தா, சின்னத்தாய், அல்லா பிச்சை, மாரியப்பன், இலக்கிய அணி கவிஞர் மூர்த்தி, மேகை செல்வம், பேபி கோபால், சேவியர், சங்கரன், காஜா முஹம்மதுசேக், பீர்முகமது ஆசிக் உள்பட கழக நிர்வாகிகள், நெல்லை பேட்டை பகுதி, தச்சை பகுதி,பாளை பகுதி,மேலப்பாளையம் பகுதி வட்ட கழகச் செயலாளர்கள், நெல்லை, தச்சை, பாளை, மேலப்பாளையம் பகுதி கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் 27 வது வார்டு செயலாளர் கேபிள் குமரேசன் நன்றி உரையாற்றினார்.




விருதுநகர் முரசொலி நிருபர் மு.கந்தசாமி இல்லத் திருமண விழாவில் மணமக்கள் அழகு முனியசாமி, கீர்த்தி திருமணத்தை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் நடத்தி வைத்தார். உடன் விருதுநகர் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், முன்னாள் சேர்மன் சுப்புராஜ், நகர திமுக செயலாளர் எஸ்.ஆர்.எஸ். தனபாலன், மாவட்ட இளைஞர் நலன் விளையாட்டுத் துறை அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு, பொது குழு உறுப்பினர் சுதாகர், திருவில்லிபுத்தூர் வெங்கட்ராமன், நகர திமுக துணைச் செயலாளர் ஏ.எஸ்.கே.ரமேஷ்குமார், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் நேஷனல் ராமர், வர்த்தக அணி எல்.திருமாறன், செந்தலைக்குமார் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராசிபுரம் கே. இராமசாமி

ஜூலை 5 (2000)



சேலம் மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவராகவும், திராவிட இயக்கத்தின ஆரம்ப கால உறுப்பினராகவும் இருந்தவர்.

இராசிபுரம் ஒன்றியம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம் என இரு ஒன்றியங்களில் செயலாளராக இருந்தவர். பேரூர்க் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

இராசிபுரம் கூட்டுறவு நிலவள வங்கித் தலைவராகவும், தமிழ்நாடு மாநில நிலவள வங்கி இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் 1999ஆம் ஆண்டு "மாநில சிறந்த கூட்டுறவாளர்" விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.